# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் 100/மா/2026

நாள் 03.09.2026

தி. பாலாஜி
சென்னை–600 049 --- முறையீட்டு மனுதாரர்

(1) மண்டல அலுவலர், மண்டலம்–7
பெருநகர சென்னை மாநகராட்சி
(2) கட்டிட உரிமையாளர், எண் 316,
இரயில்வே ஸ்டேசன் தெரு,
கொரட்டூர், சென்னை–600 050. --- எதிர்மனுதாரர்கள்

சென்னை–600 049, வில்லிவாக்கம், தெற்கு மாட வீதி, கதவு எண் 88ஏ என்கிற முகவரியில் வசிக்கும் திரு. தி. பாலாஜி என்பவரின் 10.02.2026 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.02.2026 அன்று பெறப்பட்டு 100/மா/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

சென்னை–600 049, வில்லிவாக்கம், தெற்கு மாட வீதி, கதவு எண் 88ஏ என்கிற முகவரியில் வசிக்கும் திரு. தி. பாலாஜி என்பவர் தனது 10.02.2026 நாளிட்ட மனுவில் இணைத்தனுப்பியுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல 7–ன் மண்டல அலுவலருக்கு முகவரியிட்ட 17.12.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

"மண்டலம் 7, 84–வது வட்டம், எண் 316 ரயில்வே ஸ்டேஷன் ரோடு, கொரட்டூர், சென்னை 600 080 என்கிற முகவரியில் பெருநகர சென்னை மாநகராட்சி கட்டிட விதிகள் மற்றும் சட்டத்திற்கு புறம்பாக சென்னை பெருநகராட்சியிடம் எவ்வித அனுமதியும் பெறாமல் நான்கு பக்க இடைவெளியில்லாமல் கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. இது சம்மந்தமாக நம்ம செயலி வாயிலாக 26.11.2025 அன்று புகார் அளித்திருந்தேன். ஆனாலும், இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கட்டிட பணியும் தொடர்ந்து நடைப்பெற்று வருகிறது. மேலும், சாலையினை ஆக்கிரமித்து படிகள் அமைக்கும் பணியும் நடைப்பெற்று வருகிறது. மேற்சொன்ன சாலை வழியாக குட் ஷெப்பர்ட் பள்ளிக்கு செல்லும் வாகனம் மற்றும் மாணவ மாணவிகள் செல்லும் வழி என்பதால் பெரும் இடையூறாக உள்ளது.

எனவே, தாங்கள் இது குறித்து உரிய முறையில் விசாரணை செய்து தொடர்ந்து நடைப்பெற்று வரும் கட்டிட பணியை தடுத்து நிறுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன். மேற்சொன்ன புகாரினை எக்காரணம் கொண்டும் திரும்ப பெற மாட்டேன் என உறுதி அளிக்கிறேன்.''

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 24.04.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. மனுதாரரின் புகாருக்கு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் செயற்பொறியாளர் தனது 19.05.2026 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

> ''10.2.2026 நாளிட்ட புகார் மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை அவர்களிடம் விசாரணைக்காக பெறப்பட்டுள்ளதால் அவற்றின் விளக்கம் குறித்து பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. அவற்றின் விவரம் அதற்குரிய ஆவணங்களின் உண்மை நகல்கள் சமர்ப்பிக்கப்படுகிறது.
>
> (1) கட்டிட அனுமதி பெறப்பட்ட நாள் 10.11.2025.
> (2) மேற்கூறிய விதிமீறல் கட்டிடத்திற்கு Town Planning Enforcement Form I Notice for Production of Document Notice No. Z7/Dn 84/001/2026 நாள் 24.02.2026அன்று வழங்கப்பட்டுள்ளது.
> (3) Form II Notice No. II/Z7/084/00080/2026 நாள் 11.03.2026 (Notice & Inspection) அன்று வழங்கப்பட்டுள்ளது.
> (4) Form III Notice for Removal of Unauthorised Development Carried out Without Planning Permission Notice No. III/Z07/084/00022/2026 நாள் 12.05.2026 அன்று அளிக்கப்பட்டுள்ளது.
>
> மேலும் Form III தாக்கீது 30 நாள் கால கெடுவுக்குள் (11.06.2026) விதிமீறல் கட்டிடத்தை அதன் உரிமையாளர் சீர் செய்யாவிடில் Town Planning Enforcement விதிகளின்படி Subsection(2-A), Section 56ன்படி எண் 316 ஸ்டேஷன் சாலை, கொரட்டூர், சென்னை 80 என்னும் கட்டிடத்தை Locking and Sealing செய்யப்படும் எனப் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.''.

4. மனுதாரரின் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 19.06.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு 01.06.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 19.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

> ''மண்டலம் 7, 84–வது வட்டம், எண் 316 ரயில்வே ஸ்டேஷன் ரோடு, கொரட்டூர், சென்னை 600 080 என்கிற முகவரியில் பெருநகர சென்னை மாநகராட்சி கட்டிட விதிகள் மற்றும் சட்டத்திற்கு புறம்பாகவும், சென்னை பெருநகர மாநகராட்சியிடம் எவ்வித அனுமதியும் பெறாமல் நான்கு பக்க இடைவெளியில்லாமல் கட்டிடம் கட்டப்பட்டு வந்தது. இது சம்மந்தமாக 17.12.2025 நாளிட்ட புகார் மனு அளித்தேன். ஆனாலும், இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேற்சொன்ன சாலை வழியாக குட் ஷெப்பர்ட் பள்ளிக்கு செல்லும் மாணவ மாணவிகள் ஆகியோருக்கு பெரும் இடையூறாக உள்ளது.

மேற்கண்ட கட்டிடத்திற்கு வழங்கிய தாக்கீதுகளின் நகல்களை அளிக்குமாறு கோரியும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7ன் அலுவலகத்தால் தரப்படவில்லை.

தற்போது மின்வாரியத்தால் மேற்கண்ட கட்டிடத்திற்கு மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, இதனை தடுக்கும் பொருட்டு மேற்கண்ட கட்டிடத்திற்கு வழங்கிய தாக்கீதுகளின் நகல்களை எனக்கு வழங்குமாறும் மேற்கண்ட கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்குமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7ன் மண்டல அலுவலருக்கு உத்தரவிடுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.''

6. முதலாம் எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர் 19.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

''மனுதாரர் குறிப்பிட்டுள்ள கட்டிடத்திற்கு கட்டிட அனுமதி 10.11.2025ல் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட கட்டிடத்தில் விதி மீறல் கண்டறியப்பட்டதால்,

(1) மேற்கூறிய விதிமீறல் கட்டிடத்திற்கு Town Planning Enforcement Form-I Notice for Production of Document Notice No. Z7/Dn 84/001/2026 நாள் 24.2.2026அன்று வழங்கப்பட்டுள்ளது.
(2) Form II Notice No. II/Z7 084/00080/2026 நாள் 11.03.2026 (Notice & Inspection) அன்று வழங்கப்பட்டுள்ளது.
(3) 'Form III Notice for Removal of Unauthorised Development Carried out Without Planning Permission Notice No.III/ Z/07/084/00022/2026 நாள் 12.5.2026 அன்று அளிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர், தமிழ்நாடு மின்வாரியம் மேற்கண்ட கட்டிடத்திற்கு மின் இணைப்பு வழங்க உள்ளதால் அதனை தடுக்கும் பொருட்டு இன்றைய விசாரணையில் கட்டிட உரிமையாளருக்கு வழங்கப்பட்ட தாக்கீதுகளின் நகல்களை வழங்குமாறு, கோரினார். அதன் அடிப்படையில் மனுதாரருக்கு தாக்கீதுகள் நகல்கள் வழங்கப்படும். மேலும், இது குறித்து மின்வாரியத்திற்கு உரிய கடிதம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7ன் அலுவலகத்தால் அளிக்கப்படும்.

மேலும் Form III தாக்கீது 30 நாள் கால கெடுவுக்குள் விதிமீறல் கட்டிடத்தை அதன் உரிமையாளர் சீர் செய்யாவிடில் Town Planning Enforcement Subsection - 2A Section 56–ன்படி காவல் துறையின் தகுந்த பாதுகாப்பு பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.''

7. இரண்டாம் எதிர்மனுதாரரான கட்டிட உரிமையாளர் 19.06.2026 அன்று நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை.

8. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், முதலாம் எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் மண்டல அலுவலரின் அறிக்கை, உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

''மண்டலம் 7, 84–வது வட்டம், எண் 316 ரயில்வே ஸ்டேஷன் ரோடு, கொரட்டூர், சென்னை 600 080 என்கிற முகவரியில் பெருநகர சென்னை மாநகராட்சி கட்டிட விதிகளை மீறியும் மற்றும் சட்டத்திற்கு புறம்பாகவும் சென்னை பெருநகர மாநகராட்சியிடம் எவ்வித அனுமதி பெறாமலும் நான்கு பக்க இடைவெளியில்லாமலும் கட்டிடம் கட்டப்பட்டு வந்தது சம்மந்தமாக புகார் மனு அளித்தும், இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதும், மேற்சொன்ன சாலை வழியாக குட் ஷெப்பர்ட் பள்ளிக்கு செல்லும் மாணவ மாணவிகளுக்கு பெரும் இடையூறாக உள்ளது என்பதும், மேற்கண்ட கட்டிடத்திற்கு வழங்கிய தாக்கீதுகளின் நகல்களை தனக்கு அளிக்குமாறு கோரியும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7ன் அலுவலகத்தால் தரப்படவில்லை என்பதும், தற்போது தமிழ்நாடு மின்சார வாரியத்தால் மேற்கண்ட கட்டிடத்திற்கு மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால், இதனை தடுக்கும் பொருட்டு மேற்கண்ட கட்டிடத்திற்கு வழங்கிய தாக்கீதுகளின் நகல்களை தனக்கு வழங்குமாறும் மேற்கண்ட கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்குமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7ன் மண்டல அலுவலருக்கு உத்தரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள கட்டிடத்திற்கு கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ளது என்பதும், அக்கட்டிடத்தில் விதி மீறல் கண்டறியப்பட்டதால், Town Planning Enforcement Form-I Notice for Production of Document Notice No. Z7/Dn 84/001/2026 நாள் 24.2.2026அன்று அறிவிப்பு, Form II Notice No.II/Z7 084/00080/2026 நாள் 11.3.2026 அன்று அறிவிப்பு மற்றும் Form III Notice for Removal of Unauthorised Development Carried out Without Planning Permission Notice No.III/Z07/084/00022/2026 நாள் 12.5.2026 ஆகிய தேதிகளில் அறிவிப்பு வழங்கப்பட்டன என்பதும், மேற்கண்ட கட்டிடத்திற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் மின் இணைப்பு வழங்க உள்ளதால், அதனை தடுக்கும் பொருட்டு 19.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் கட்டிட உரிமையாளருக்கு வழங்கப்பட்ட தாக்கீதுகளின் நகல்களை வழங்குமாறு மனுதாரர் கோரியுள்ளதன் அடிப்படையில், மனுதாரருக்கு மேற்கண்ட தாக்கீதுகளின் நகல்கள் வழங்கப்படும் என்பதும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7ன் அலுவலகத்திலிருந்து தமிழ்நாடு மின்சாரவாரியத்திற்கு உரிய கடிதம் அனுப்பப்படும் என்பதும், Form III தாக்கீதின்படி 30 நாள் கால கெடுவுக்குள் மேற்கண்ட விதிமீறல் கட்டிடத்தை கட்டிட உரிமையாளர் சீர் செய்யாவிடில், Town Planning Enforcement விதிகளின்படி Subsection (2-A) Section 56–ன்படி காவல் துறையிடம் தகுந்த பாதுகாப்பு பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் மண்டல அலுவலரின் அறிக்கை, உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 7, 84–வது வட்டம், சென்னை 600 080, கொரட்டூர், ரயில்வே ஸ்டேஷன் ரோடு, கதவு எண் 316 என்ற முகவரியில் உள்ள கட்டிட அனுமதி பெறப்பட்டு, கட்டப்பட்ட கட்டிடத்தில் விதி மீறல் கண்டறியப்பட்டதால், 24.02.2026, 11.03.2026 மற்றும் 12.5.2026 ஆகிய தேதிகளில் உரிய தாக்கீதுகள் வழங்கப்பட்டுள்ள நிலையில், மேற்கண்ட கட்டிடத்திற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் மின் இணைப்பு வழங்க உள்ளதால், அதனை தடுக்கும் பொருட்டு கட்டிட உரிமையாளருக்கு வழங்கப்பட்ட தாக்கீதுகளின் நகல்களை மனுதாரர் கோரியவாறு, அத்தாக்கீதுகளின் நகல்கள் வழங்கப்படும் என்றும், இப்பொருள் தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–லிருந்து தமிழ்நாடு மின்சாரவாரியத்திற்கு கடிதம் அனுப்பப்படும் என்பதும், Form III

தாக்கீதின்படி 30 நாள் கால கெடுவுக்குள் மேற்கண்ட விதிமீறல் கட்டிடத்தை கட்டிட உரிமையாளர் சீர் செய்யாவிடில், காவல் துறையிடம் தகுந்த பாதுகாப்பு பெற்று சட்டபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர் தங்களுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971ன் கீழும் மற்றும் விதி மீறி கட்டப்பட்ட கட்டிடங்கள் குறித்து மாண்பமை உச்சநீதிமன்றம் மற்றும் மாண்பமை உயர்நீதிமன்றங்கள் வெளியிட்டுள்ள வழிகாட்டுதல்களின்படியும் உரிய சட்டபூர்வ நடவடிக்கையும் மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் மண்டல அலுவலருக்கு அறிவுறுத்துமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 03–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. தி. பாலாஜி,
கதவு எண் 88ஏ, தெற்கு மாட வீதி,
வில்லிவாக்கம், சென்னை–600 049.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர்,
மண்டலம் 7 அம்பத்தூர்,
பெருநகர சென்னை மாநகராட்சி, அம்பத்தூர்,
சென்னை–600 053.

(4) கட்டிட உரிமையாளர்,
கதவு எண் 316, இரயில்வே ஸ்டேசன் தெரு,
கொரட்டூர், சென்னை–600 050.

(5) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர்,
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

<u>நகல்:</u>
மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள்
முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.